உ

செந்திலாண்டவன் துணை

காரைக்கால் அம்மையார் 569

அருளிச்செய்த

# அற்புதத் திருவந்தாதி

குறிப்புரைகளுடன்

*

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

**அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

திருவுளப்பாங்கின்படி


ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி

Principal

வித்துவான் கே. எம். வேங்கடராமையா M.A.B.O.L.

அவர்களால் வெளியிடப்பெற்றது

**1949**

உ

செந்திலாண்டவன் துணை

# முன்னுரை

திருத்தொண்டத் தொகையில் '**பேயார்**' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் குறிக்கப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். இவர் வணிக மரபினர். புனிதவதியார் என்னும் இயற்பெயரினர். பரம தத்தன் என்பாரை மணந்தவர். 'பிறந்து மொழிபயின்ற பின் எல்லாம் காதல் சிறந்து' சிவபெருமான் சேவடியை இடையறாது போற்றும் இயல்பினர். ஒருநாள் இறைவன் திருவருளால் மாங்கனி ஒன்று அம்மையார் பெற்றதைக்கண்ட பரமதத்தன் அம்மையாரை விட்டு நீங்கி, வேற்றூர் சென்று, வேறொரு மாதினை மணந்து, மகப் பேறு பெற்று வாழ்ந்திருந்தான். அவ்வூர்க்கு அம்மையார் அழைத்துச் செல்லப் பெற்றார். பரமதத்தன் அம்மையாரைத் தெய்வமாகக் கருதி வணங்க அம்மையார் இறைவன் அருளால் 'மெய்யில் ஊனுடை வனப்பை எல்லாம் உதறி எற்புடம்பே ஆக வானமும் மண்ணும் எல்லாம் வணங்கு பேய் வடிவம்' கொண்டு சிவபெருமான் பேரில் **"அற்புதத் திருவந்தாதி"** என்னும் நூலைப் பாடினார்.

இவ்வரிய நூல் அந்தாதித் தொடை அமையப்பெற்று **101** வெண்பாக்களால் ஆயது; சிவபெருமானது பேராற்றலையும் பேரருளையும் வெகுவாகத் தெரிப்பது; சிவபரத்துவத்தை நிலைநாட்டுவது; சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்தது; சிவனடியாரை வணங்குக என்று அறிவுறுத்துவது; நகைச்சுவை பொருந்திய பாடல்களையுடையது; கல்வி வல்லார்க்குப் பெருவிருந்து அளிப்பது.

இத்தகைய பொருட் பெற்றி வாய்ந்த இந்நூற்குக் குறிப்புரை எழுதிப் பதிப்பிக்கும் பேறு எனக்கு வாய்த்தது! சிவக்கவிமணி அவர்களும் கரந்தைக் கவியரசரும் எழுதியுள்ள உரைகள் நான் குறிப்புரை எழுதுவதற்குப் பெரிதும் பயன்பட்டமையின் அவ்விரு பேரறிஞர்கட்கும் நான் பெரிதும் கடமைப் பட்டவன் ஆவேன்.

இந்நூற் பதிப்புக்குக் காரணர் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களே ஆவர். அவர்கள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்துவரும் பணிகள் பல திறத்தன. அவர்கள் செய்து வரும் அறங்கள் பல துறைகளில் உள்ள மக்கட்குப் பேருதவி பயக்கும் நிலையில் உள்ளன என்பது சொல்லாமே அமையும். அப் பேரறக் கட்டளைகளின் விபரத்தைப் பிற் சேர்க்கையிற் காண்க.

இங்ஙனம்

திருப்பனந்தாள், 13—6—'49.

வித்துவான்
கே. எம். வேங்கடராமையா M.A., B.O.L.

சேந்திலாண்டவன் துணை

காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த

# அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழிபயின்ற பின் எல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்; — நிறம் திகழும்
மைஞ் ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ் ஞான்று தீர்ப்பது இடர்? 1

இடர் களையா ரேனும், எமக்கு இரங்கா ரேனும்,
படரும் நெறி பணியா ரேனும்—சுடர் உருவில்
என்பு அருக் கோலத்து எரி ஆடும் எம்மானார்க்கு
அன்பு அறாது என் நெஞ்சு அவர்க்கு. 2

அவர்க்கே எழுபிறப்பும் ஆள் ஆவோம்; என்றும்
அவர்க்கே நாம் அன்பு ஆவது அல்லால்,—பவர்ச்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கு அல்லால், மற்று ஒருவர்க்கு
ஆகாப்போம்; எஞ் ஞான்றும் ஆள். 3

ஆள் ஆனோம் அல்லல் அறிய முறையிட்டால்
கேளாதது என்கொலோ? கேளாமை — நீள் ஆகம்
செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றும்
எம்மை ஆட்கொண்ட இறை. 4

இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்; தோற்றி
இறைவனே ஈண்டு இறக்கம் செய்வான்; — இறைவனே
'எந்தாய்!' என இரங்தும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அது மாற்று வான். 5

வானத்தான் என்பாரும் என்க; மற்று உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தானென்க; — ஞானத்தான்,
முன் நஞ்சத்தால் இருண்ட மெய்ஒளிசேர் கண்டத்தான்,
என் நெஞ்சத்தான், என்பன் யான். 6

யானே தவம் உடையேன்; என்நெஞ்சே நல்நெஞ்சம்;
யானே பிறப்பு அறுப்பான் எண்ணினேன்;—யானே அக்
கைம்மா உரிபோர்த்த கண்நுதலான் வெண் நீற்ற
அம்மானுக்கு ஆள் ஆயினேன். 7

ஆயினேன் ஆள்வானுக்கு; அன்றே பெறற்கு அரியன்
ஆயினேன்; அஃதுஅன்றே ஆமாறு—தூய
புனல்கங்கை ஏற்றான் ஓர் பொன்வரையே போல்வான்
அனற்கு அங்கை ஏற்றான் அருள். 8

அருளே உலகெலாம் ஆள்விப்பது; ஈசன்
அருளே பிறப்புஅறுப்பது; ஆனால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதிஉடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு. 9

எனக்கு இனிய எம்மானை, ஈசனை, யான் என்றும்
மனக்கு இனிய வைப்பாக வைத்தேன்;—எனக்கு அவனைக்
கொண்டேன் பிரான் ஆக; கொள்வதுமே இன்புற்றேன்;
உண்டே எனக்கு அரியது ஒன்று? 10

ஒன்றே நினைந்து இருந்தேன்; ஒன்றே துணிந்தொழிந்தேன்;
ஒன்றே என் உள்ளத்தினுள் அடைத்தேன்;—ஒன்றே காண்
கங்கையான், திங்கள் கதிர் முடியான், பொங்கு ஒளிசேர்
அங்கையாற்கு ஆள் ஆம் அது. 11

அதுவே பிரான் ஆம்ஆறு; ஆட்கொள்ளும் ஆறும்
அதுவே; இனி அறிந்தோம் ஆனால்—அதுவே
பனிக்கு அணங்கு கண்ணியார் ஒள் நுதலின் மேல்ஓர்
தனிக்கண் அங்கு வைத்தார் தகவு. 12

தகவுஉடையார் தாம்உளரேல் தார்அகலம் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர்;—மிக அடர
ஊர்ந்திடும் மாநாகம், ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமேல் ஏ! பாவம் தான். 13

தானே தனிநெஞ்சம் தன்னை உயக்கொள்வான்
தானே பெரும்சேமம் செய்யுமால்—தானே ஓர்
பூண் ஆகத்தால்பொலிந்து பொங்கு அழல்சேர் நஞ்சுஉமிழும்
நீள் நாகத்தானை நினைந்து. 14

நினைந்து இருந்து வானவர்கள் நீள்மலரால் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார்;—நினைந்து இருந்து
'மின்செய் வான் செஞ்சடையாய்! வேதியனே!' என்கின்
என் செய்வான் கொல்லோ? இனி. [றேற்கு

இனியோம் நாம் உய்ந்தோம்; இறைவன்தாள் சேர்ந்தோம்;
இனி ஓர் இடர்இல்லோம்; நெஞ்சே!—இனி ஓர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். 16

காண்பார்க்கும் காணலாம் தன்மையனே; கைதொழுது
காண்பார்க்கும் காணலாம்; காதலால்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே; தொல் உலகுக்கு
ஆதியாய் நின்ற அரன். 17

அரன் என்கோ? நான்முகன் என்கோ? அரியாம்
பரன் என்கோ? பண்பு உணர மாட்டேன்—முரண் அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை
யான் அவனை எம்மானை இன்று. 18

இன்றும் நமக்குஎளிதே; மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை—என்றும் ஓர்
மூவா மதியானை மூவேழ் உலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. 19

அறிவானும் தானே; அறிவிப்பான் தானே;
அறிவாய் அறிகின்றான் தானே;—அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே; விரிசுடர்பார் ஆகாயம்
அப் பொருளும் தானே அவன். 20

அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்று ஆவான்—அவனே
இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயன் ஆகி நின்றானும் வந்து. 21

வந்துஇதனைக் கொள்வதே ஒக்கும்; இவ் வாள் அரவின்
சிந்தை அது தெரிந்து காண்மினோ;—வந்து ஓர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர்! எங்கள்
பிரானீர்! உம் சென்னிப் பிறை. 22

பிறையும் புனலும் அனல் அரவும் சூடும்
இறைவர் எமக்கு இரங்காரேனும்—'கறைமிடற்ற
எந்தைபார்க்கு ஆட்பட்டோம்' என்று என்று இருக்குமே
எம் தையா உள்ளம் இது. 23

இது [illegible] ஆமாறு ;
இது [illegible] ஓர் சேமம் ;—இதுவன்றே
மின்னும் சுடர்உருவாய் மீண்டாய் என் சிந்தனைக்கே ;
இன்னும் சுழல்கின்றது இங்கு. 24

இங்குஇருந்து சொல்லுவது என்? எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும்,—பொங்கு இரவில்
ஈமவனத்து ஆடுவதும், என்னுக்கு என்று ஆராய்வோம்
நாம் அவனைக் காணலுற்ற ஞான்று. 25

ஞான்ற குழல்சடைகள் பொன்வரைமேல் மின்னுவன
போன்ற ; கறைமிடற்றான் பொன்மார்பின்—ஞான்றுஎங்கும்
மிக்குஅயலே தோன்ற விளங்கி மிளிருமே,
அக்குஅயலே தோன்றும் அரவு. 26

அரவம்ஒன்று ஆகத்து நீஅயந்து பூணேல்,
பரவித் தொழுது இரந்தோம் பன்னாள் ;—முரண் அழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓர்அம்பால் எய்தானே !
பொன் ஆரம் மற்றொன்று பூண். 27

பூண்ஆக ஒன்று புனைந்து, ஒன்று பொங்கு அதளின்
நாண்ஆக மேல்மிளிர நன்குஅமைத்துக்—கோள்நாகம்
பொன்முடிமேல் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்கு
என்முடிவ தாக? இவர். 28

இவரைப் பொருள்உணர மாட்டாதார் எல்லாம்
இவரை இகழ்வதே ! கண்டீர்—இவர் தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்புஅணிந்த
பேய்க்கோலம் கண்ட பிறர். 29

பிறர்அறிய லாகாப் பெருமை
பிறர்அறியும் பேருணர்வும் தாமே;—
என்பே அணிந்துஇரவில் தீஆடும் எம்மானார்
வன் பேயும் தாமும் மகிழ்ந்து. 30

மகிழ்தி மடநெஞ்சே! மானுடரில் நீயும்
திகழ்தி; பெருஞ்சேமம் சேர்ந்தாய்;—இகழாதே
யார் என்பே யேனும் அணிந்து உழல்வார்க்கு ஆட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. 31

பெருகுஒளிய செஞ்சடைமேல் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்துஒழுகிற்று ஒக்கும்;—தெரியின்
முதற்கண்ணான், முப்புரங்கள் அன்று எரித்தான், மூவா
நுதல் கண்ணான் தன்மார்பின் நூல். 32

நூல்அறிவு பேசி நுழைவு இலாதார் திரிக!
நீல மணி மிடற்றான் நீர்மையே—மேல்உலந்தது;
எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக் கோலத்து அவ்வுருவே யாம். 33

ஆமாறு அறியாமே வல்வினைகள், அந்தரத்தே
நாம்ஆள் என்று ஏத்தார் நகர்மூன்றும்—வேம்ஆறு
ஒருகணையால் செற்றானை உள்ளத்தால் உள்கி
அருகு அணையாதாரை, அடும். 34

அடும்கண்டாய் வெண்மதி, என்றுஅஞ்சி இருள்போந்து
இடம்கொண்டு இருக்கின்றது ஒக்கும்;—படம்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவுஅசைத்தான் கோல
மணி மிடற்றின் உள்ள மறு. 35

மறுஉடைய கண்டத்தீர்! வார்சடைமேல் நாகம்
தெறும் என்று தேய்ந்துஉழலும்; ஆஆ!—உறுவான்
தளரமீது ஓடுமேல் தான்அதனை அஞ்சி
வளருமோ? பிள்ளை மதி. 36

மதியா அடல்அவுணர் மாமதில் மூன்றுஅட்ட
மதி ஆர் வளர் சடையினானை—மதியாலே
என்பு ஆக்கையால் இகழாது ஏத்துவரேல் இவ்வுலகில்
என்பு ஆக்கையாய்ப் பிறவார் ஈண்டு. 37

ஈண்டு ஒளிசேர் வானத்து எழுமதியை வாள்அரவம்
தீண்டச் சிறுகியதே போலாதே—பூண்டதோர்
தார்ஏறு பாம்புஉடையான் மார்பில் தழைத்துஇலங்கு
கூர்ஏறு கார் ஏனக் கொம்பு. 38

கொம்பினை ஓர் பாகத்துக் கொண்ட குழகன் தன்
அம் பவளமேனி அது முன்னம்—செம் பொன்
அணி வரையே போலும்; பொடி அணிந்தால் வெள்ளி
மணி வரையே போலும் மறித்து. 39

மறித்து மடநெஞ்சே! வாயாலும் சொல்லிக்
குறித்துத் தொழு தொண்டர்பாதம்;—குறித்து ஒருவர்
கொள்ளாத திங்கள் குறுங்கண்ணி கொண்டார் மாட்டு
உள்ளாதார் கூட்டம் ஒருவு. 40

ஒருபால் உலகு அளந்த மாலவனும்; மற்றை
ஒருபால் உமையவள்ஆம் என்றால்—இருபாலும்
நின் உருவம் ஆக நிறம் தெரிய மாட்டோமால்
நின் உருவோ மின்உருவோ நேர்ந்து. 41

நேர்ந்து அரவம் கொள்ளச் சிறுகிற்றே? நீ அதனை
ஈர்ந்தளவே கொண்டு இசைய வைத்தாயோ?—பேர்ந்து
வளம் குழவித்தாய் வளரமாட்டாதோ? என்னோ?
இளம் குழவித் திங்கள் இது. 42

'திங்கள் இதுசூடிச் சில்பலிக்கு என்று ஊர்திரியேல்;
எங்கள் பெருமானே!' என்று இரந்து—பொங்கு ஒளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே?
தானே அறிவான் தனக்கு. 43

தனக்கே அடியனாய்த் தன் அடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு என்கொல்?—மனக்கினிய
சீராளன், கங்கை மணவாளன், செம்மேனிப்
பேராளன், வானோர் பிரான். 44

பிரான் அவனை நோக்கும் பெருநெறியே பேணிப்,
பிரான் அவன் தன் பேரருளே வேண்டிப்,—பிரான் அவனை
'எங்குற்றான்?' என்பீர்கள்! என் போல்வார் சிந்தையினும்
இங்குற்றான்; காண்பார்க்கு எளிது. 45

எளியது இது அன்றே; ஏழைகாள்! யாதும்
அளியீர்! அறிவிலீர்! ஆ!—ஒளிகொள் மிடற்று
எந்தை, அராப் பூண்டு உழலும் எம்மானை, உள்நினைந்த
சிந்தையராய் வாழும் திறம். 46

இறந்தான் மடநெஞ்சே! சென்று அடைவது அல்லால்
பெறத்தானும் ஆகியோ? பேதாய்!—இறந்த
இரு வடிக்கண் ஏழைக்கு ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு. 47

திருமார்பில் ஏனச் செழு மருப்பைப் பார்க்கும்;
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்;—ஒருநாள்
இதுமதி என்று ஒன்றாக இன்றளவும் தேராது;
அது மதி ஒன்று இல்லா அரா. 48

அராவி வளைத்தனைய அம் குழவித் திங்கள்
விராவு கதிர் விரிய ஓடி—விராவுதலால்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே?
தன்னோடே ஒப்பான் சடை. 49

சடைமேல் அக்கொன்றை தருகனிகள் போன்று
புடைமேவித் தாழ்ந்தனவே போலும்;—முடிமேல்
வலப்பால்அக் கோலமதி வைத்தான் தன்பங்கின்
குலப்பாவை நீலக் குழல். 50

குழல்ஆர் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழில் ஆக வைத்து ஏக வேண்டா;—கழல் ஆர்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேய்ஆடும்
ஆரழல் வாய் நீஆடும் அங்கு. 51

அங்கண் முழுமதியம் செக்கர் அகல்வானத்து
எங்கும் இனிது எழுந்தால் ஒவ்வாதே;—செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 52

சீர் ஆர்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேண்உலவி
நீர் ஆர்ந்த பேரியாறு நீத்தமாய்ப்—போர்ஆர்ந்த
நாண் பாம்பு கொண்டு அசைத்த நம்ஈசன பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வே ஓர் கார். 53

கார் உருவக் கண்டத்து எம் கண் நுதலே! எங்கு ஒளித்தாய்?
ஓர் உருவாய் நின்னோடு உழிதருவான்,—நீர் உருவ
மேகத்தால் செய்தனைய மேனியான், நின்னுடைய
பாகத்தான் காணுமே பண்டு. 54

பண்டு அமரர் அஞ்சப் படுகடலில் நஞ்சுண்டு
கண்டம் கறுத்ததுவும், அன்றியே—உண்டு;
பணி உறு வார் செஞ்சடைமேல் பால்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 55

வடு அன்று எனக்கருதி நீமதித்தி ஆயின்
சுடு வெண் பொடிநிறத்தாய்! சொல்லாய்—படுவெண்
புலால் தலையினுள் ஊண் புறம் பேசக் கேட்டோம்
நிலாத் தலையிற் சூடுவாய் நீ. 56

நீ உலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவு ஒழியச் செல், கண்டாய்;—தூய
மடவரலார் வந்து பலிஇடார், அஞ்சி;
விட அரவம் மேல் ஆட மிக்கு. 57

மிக்க முழங்கு எரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடன் இருந்தால் ஒவ்வாதே;—செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும், ஆங்கு அவன் தன் பொன் உருவின்
பாகத்தாள் பூங்குழலும், பண்பு. 58

பண்பு உணர மாட்டேன் நான்; நீயே பணித்துக்காண்;
கண் புணரும் நெற்றிக் கறைக் கண்டா!—பெண் புணரும்
அவ் வுருவோ? மால் உருவோ? ஆன் ஏற்றாய்! நீறு அணிவது
எவ்வுருவோ? நின் உருவ மேல். 59

மேலாய மேகங்கள் கூடி ஓர் பொன் விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே;—மால் ஆய
கைம்மா மதக்களிற்றுக் கார்உரிவை போர்த்த போது
அம்மான் திருமேனி அன்று. 60

அன்றும் திருவுருவம் காணுதே ஆட்பட்டேன்;
இன்றும் திருவுருவம் காண்கிலேன்;—என்றும் தான்
'எவ்வுருவோன் நும்பிரான்?' என்பார்கட்கு என்உரைக்கேன்!
எவ்வுருவோ நின் உருவம்? ஏது? 61

ஏது ஒக்கும்? ஏது ஒவ்வாது? ஏது ஆகும்? ஏது ஆகாது?
ஏது ஒக்கும் என்பதனை யார் அறிவார்?—பூதப்பால்
வில் வேடன் ஆகி விசயனோடு ஏற்ற நாள்
வல் வேடன் ஆன வடிவு. 62

வடிவு உடைய செங்கதிர்க்கு மாறுய்ப் பகலே
நெடிது உலவி நின்று எறிக்கும் கொல்லோ?—கடி உலவு
சொல் முடிவு ஒன்று இல்லாத சோதியாய்! சொல்லாயால்;
நின் முடி மேல் திங்கள் நிலா. 63

நிலா இலங்கு வெண்மதியை நேடிக் கொள்வான் போல்
உலாவி உழிதருமா கொல்லோ?—நிலா இருந்த
செக்கர் அவ்வானமே ஒக்கும் திருமுடிக்கே
புக்கரவம் காலையே போன்று. 64

காலையே போன்று இலங்கும் மேனி; கடும் பகலின்
வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு;—மாலையின்
தாங்கு உருவே போலும் சடைக்கற்றை; மற்று அவற்கு
வீங்கு இருளே போலும் மிடறு. 65

மிடற்றில் விடம் உடையீர்! உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடம்கொண்ட வாறே?—மிடற்று அகத்து
மைத்து ஆம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ?
பைத்து ஆடும் நும் மார்பில் பாம்பு. 66

பாம்பும் மதியும் மடமானும் பாய் புலியும்
தாம் பயின்று தாழ்அருவி தாங்குதலால்,—ஆம்; பொன்
உருவடிவில் ஓங்குஒளிசேர் கண்நுதலான் கோலத்
திருவடியில் மேய சிலம்பு. 67

சிலம்படியாள் ஊடலைத் தான் தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்பு அடிமேல் செவ்வரத்தம் சேர்த்தி—நலம்பெற்று
எதிர்ஆய செக்கரினும் இக்கோலம் செய்தான்;
முதிரா மதியான் முடி. 68

முடிமேல் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடி மேற்கொடு மதியோம் கூற்றை;—படிமேல்
குனிய வலம்ஆம் அடிமை கொண்டாடப் பெற்றோம்;
இனி அவலம் உண்டோ எமக்கு? 69

எமக்கு இதுவோ பேராசை என்றும் தவிராது;
எமக்கு ஒருநாள் காட்டுதியோ? எந்தாய்!—அமைக்கவே
போந்து எரிபாய்ந்தன்ன புரிசடையாய்! பொங்கு இரவில்
ஏந்து எரிபாய்ந்து ஆடும் இடம். 70

இடப் பால வானத்து எழுமதியை நீ ஓர்
மடப்பாவை தன் அருகே வைத்தால்—இடப்பாகம்
கொண்டாள் மலைப்பாவை கூறு ஒன்றும் கண்டிலம், காண்;
கண்டாயே முக்கண்ணாய்! கண். 71

கண்டு 'எந்தை!' என்று இறைஞ்சிக் கைப்பணி யான் செய்யே
அண்டம் பெறினும் அதுவேண்டேன்; - துண்டம்சேர் [னேல்
விண் ஆளும் திங்களாய்! மிக்கு உலகம் ஏழினுக்கும்
கண்ணாளா! ஈதுஎன் கருத்து. 72

கருத்தினால் நீகருதிற்று எல்லாம் உடனே
திருத்தலாம், சிக்கென; நான் சொன்னேன்;—பருத் தரங்க
வெள்ள நீர் ஏற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே! எப்போதும் ஓது. 73

ஓதம் நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்து அட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால்;—பேதையர்கள்
எண்ணாது இடும்பலியால் என்னோ நிறைந்தவா!
கண் ஆர் கபாலக் கலம். 74

கலங்கு புனல்கங்கை ஊடு ஆலலாலும்,
இலங்கு மதி இயங்கலாலும்,—நலங்கொள்
பரிசுஉடையான் நீள்முடிமேல் பாம்பு இயங்கலாலும்,
விரிசடையாம் காணில் விசும்பு. 75

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணி மகுடம் தேய்ப்ப—பூசிந்து எங்கும்
எந்தாய்! தழும்பு ஏறியே பாவம் பொல்லாவாம்
அந்தாமரை போல் அடி. 76

அடிபேரின் பாதாளம் பேரும்; அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்;—கடகம்
மறிந்த ஆடும் கை பேரில் வான்திசைகள் பேரும்;
அறிந்து ஆடும்; ஆற்றாது அரங்கு. 77

அரங்கமாய்ப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும்? ஏழாய்!—இரங்குமேல்
என் ஆக வையான்? தான் எவ்வுலகம் ஈந்து அளியான்?
பன்னாள் இரந்தால் பணிந்து. 78

பணிந்தும், படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும், அணிந்தவரை ஏத்தத்—துணிந்த, என்றும்
எந்தையார்க்கு ஆட்செய் யப்பெற்ற இதுகொலோ!
சிந்தையார்க்கு உள்ள செருக்கு. 79

செருக்கினால் வெற்புஎடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன்நின்று அடர்த்த;—திருத்தக்க
மால்அய னும் காணாது அரற்றி மகிழ்ந்து ஏத்தக்
காலனையும் வென்று உதைத்த கால். 80

காலனையும் வென்றோம்; கடுநரகம் கைகழன்றோம்;
மேலை இருவினையும் வேர் அறுத்தோம்;—கோல
அரணார் அவிந்து அழிய வெந்தீ அம்பு எய்தான்
சரணாரவிந்தங்கள் சார்ந்து. 81

சார்ந்தார்க்குப் பொன் கொழுந்தே ஒத்துஇலங்கிச், சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியதாம்;—தேர்ந்து உணரில்,
தாழ்சுடரோன் செங்கதிரும் சாயும் தழல் வண்ணன்
வீழ்சடையே என்று உரைக்கும், மின். 82

மின்போலும் செஞ்சடையான் மாலோடும் ஈண்டுஇசைந்தால்
என்போலும்? காண்பார்கட்கு, என்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றும் தாமுடனே
நிற்கின்ற போலும், நெடிது. 83

நெடிது ஆய பொங்குளரியும், தண்மதியும் நேரே
கடிதாம் கடுஞ்சுடரும் போலும்;—கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீயினில் அழியக்
கண்டாலும் முக்கணான் கண். 84

கண்ணாரக் கண்டும், என் கையாரக் கூப்பியும்,
எண் ஆர எண்ணத்தால் எண்ணியும்,—'விண்ணோன்!
எரியாடி!' என்று என்றும் இன்புறுவன் கொல்லோ!
பெரியானைக் காணப் பெறின். 85

பெறினும் பிறிதுயாதும் வேண்டேம்; நமக்குஈது
உறினும் உறாது ஒழியுமேனும்—சிறிது உணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேய் ஆய
நற் கணத்தில் ஒன்றாய நாம். 86

நாமாலை சூடியும், நம்ஈசன் போன்அடிக்கே
பூமாலை கொண்டு புனைந்து, அன்பாய்—நாம் ஓர்
அறிவினையே பற்றினால், எற்று எது அடுமே?
எறி வினையே என்னும் இருள். 87

இருளின் உரு என்கோ? மாமேகம் என்கோ?
மருளின் மணி நீலம் என்கோ?—அருள் எமக்கு;
நன்று உடையாய்! செஞ்சடைமேல் நக்கு இலங்கு வெண்மதியம்
ஒன்று உடையாய்! கண்டத்து ஒளி. 88

ஒளிவிலி வல்மதனை ஒண் பொடியா நோக்கித்
தெளிவுஉள்ள சிந்தையினில் சேர்வாய்!—ஒளிநஞ்சம்
உண்ட வாய் அஃது இருப்ப, உன்னுடைய கண்டம் இருள்
கொண்டவாறு என்? இதனைக் கூறு. 89

கூறு எமக்கு ஈது; எந்தாய்! குளிர்சடையை மீது அழித்திட்டு;
ஏற மிகப் பெருகின் என்செய்தி?—சீறி
விழித்து ஊரும் வாள்அரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்து ஓடும் கங்கைத் திரை. 90

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாம்உணர்ந்தோம் கண்டீர்;—தெரிமினோ;
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே;
எம்மைப் புறன் உரைப்பது என்? 91

என்னை உடையானும், ஏகம்ஆய் நின்றானும்,
தன்னை அறியாத தன்மையனும்,—பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்கு
அருளாக வைத்த அவன். 92

அவன் கண்டாய் வானோர்பிரான் ஆவான்; என்றும்,
அவன் கண்டாய் அம்பவள வண்ணன்;—அவன் கண்டாய்
மைத்து அமர்ந்த கண்டத்தான்; மற்று அவன்பால் நல்நெஞ்சே!
மெய்த்து அமர்ந்து அன்பாய் நீவிரும்பு 93

விருப்பினால் நீபிரியகில்லாயோ? வேறு
இருப்பிடம் மற்று இல்லையோ? என்னோ?—பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால் விடையாய்! நிற்பிரிந்து வேறுஇருக்க
அஞ்சுமோ? சொல்லாய்; அவள். 94

அவள் ஓர் குலமங்கை பாகத்து அகலாள்;
இவள் ஓர் சலமகளும் ஈதே;—தவள நீறு
என்பு அணிவீர்! என்றும் பிரிந்தறியீர்; ஈங்கு இவருள்
அன்பு அணியார், சொல்லுமின்; இங்கு ஆர்? 95

ஆர்வல்லார் காண? அரன்அவனை, அன்பு என்னும்
போர்வை அதனாலே போர்த்து அமைத்துச்,—சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனி நெஞ்சினுள் அடைத்து,
மாயத்தால் வைத்தோம் மதித்து. 96

மறைத்து உலகம் ஏழினிலும் வைத்தாயோ? அன்றேல்
உறைப்போடும் உன்கைக் கொண்டாயோ?—நிறைத்திட்டு
உளைந்து எழுந்து நீ எரிப்ப மூவுலகும் உள்புக்கு
அளைந்து எழுந்த செந்தீ அழல். 97

அழல் ஆட அங்கை சிவந்ததோ? அங்கை
அழகால் அழல் சிவந்த வாறோ?—கழல் ஆடப்
பேய் ஆடுகானில் பிறங்க அனல் ஏந்தித்
தீ ஆடுவாய் இதனைச் செப்பு. 98

செப்பு ஏந்து இளமுலையாள் காணவோ? தீப்படுகாட்டு
அப் பேய்க்கணம் அவைதாம் காணவோ?—செப்பு எனக்கு
ஆகத்தான் அங்காந்து அனல்உமிழும் ஐவாய [ஒன்று;
நாகத்தாய்! ஆடு உன் நடம். 99

நடக்கில் படி நடுங்கும்; நோக்கில் திசை வேம்;
இடிக்கில் உலகுஅனைத்தும் ஏங்கும்;—அடுக்கல்
பொரும் ஏறோ? ஆன் ஏறோ? பொன் ஒப்பாய்! நின் ஏறு
உரும் ஏறோ? ஒன்று உரை. 100

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரையினால் **காரைக்கால் பேய்** சொல்—பரவுவார்
ஆராத அன்பினொடு அண்ணலைச்சென்று ஏத்துவார்;
பேராத காதல் பிறந்து. 101

# அற்புதத் திருவந்தாதி: குறிப்புரை

1. மைஞ்ஞான்ற - கருநிறம் பொருந்திய. நஞ்சினால் தேவர்களுக்கு நேர்ந்த துன்பத்தை இறைவன் நீக்கியது போலத் தன் இடரையும் இறைவன் நீக்குவன் என்பது கருத்து. இடர் - பிறவித் துன்பம்.

2. என்புஅருக் கோலம் - சிவபெருமானுடைய முழு முதற் கடவுளாம் தன்மையைக் குறிக்கும். 'பெருங்கடல் மூடி' என்ற அப்பர் தேவாரம் காண்க.

3. பவர் - அடர்ந்த. பாகாப் போழ் - பிறைச்சந்திரன். பிறை சூடியமை-அருளுடைமைக் குறிப்பு. பேரருள்உடைய ஈசனைத் தவிர்த்துச் செத்துப் பிறக்கின்ற பிற தெய்வங்களை வணங்கேன் என்றார். ஆகாப்போம்-ஆகோம்; ஆள் ஆகோம் என்க. 'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்' என்றார் அப்பர்.

4. ஆள் ஆனோம் - ஆட்பட்ட நாங்கள். அல்லல் - துன்பம். ஆகம் - திருமேனி. மிடறு - கண்டம். "திருமேனி முழுதும் செந்நிறம் ஆக, மிடறு ஒன்றுமே கரிதாயிற்று. ஆயினும் அது அருளின் வண்ணமே ஆதல்போல, முழுதும் தலைவராம் தன்மையுடைய இறை. நமது முறை யீட்டைக்கேளார் போன்று இருத்தலும் அருளின் வண்ணமேயாம்" என்பர் சிவக்கவி மணி.

5. இறக்கம் செய்வான்-அழிப்பான். 'அழிப்பு இளைப் பாற்றல்' என்பது சித்தியார். தோற்றுவித்த இறைவன்

ஆன்மாக்களைக் காத்துப் பின் இளைப்பாறச்செய்து அருளுகிற தன்மையை இப் பாடலில் குறித்தார்.

6. உம்பர் கோன் - தேவர்களுக்குத் தலைவன்; சிவ பெருமான். தானத்தான் - மண் உலகத்தான். இறைவன் அடியாருடைய நெஞ்சத்தாமரையில் வீற்றிருத்தல்: நினைப் பவர் மனம் கோயிலாக் கொண்டவன்—அப்பர் தேவாரம்; மலர் மிசை ஏகினான் - குறள்.

7. சிவபெருமான் திருவடிகள் தன் நெஞ்சுள் இருந்த மையின் 'நன்னெஞ்சம்' என்றார். கைம்மா - யானை. உரி - தோல். நுதல் - நெற்றி.

8. ஆயினேன் - (ஆள்) ஆனேன். ஆள்வான் - ஆட் கொள்ளும் சிவபெருமான். புனல் கங்கை - கங்கை யாறு. அருள் ஆமாறு - அருள்பொருந்தும் விதம்: இறைவனுக்கு ஆள் ஆதலையாம். 'யாமார்க்கும் குடியல்லோம்' என்ற தேவாரத்துள் 'என்றும் மீளாஆளாய்' இருத்தலைப் பெரு மிதத்துடன் குறிக்கப் பெற்றுள்ளமை இங்குக் கருதுக.

9. அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதி - அவன் அருளே கண்ணாகக்கண்டு, அவனருளாலே அவன் தாள் வணங்குதல். நப்பர் அருளார் ஆயின் மெய்ப் பொருளை அறியமுடியாமையை அப்பர் வரலாற்றுள் வைத்துக் காண்க.

10. மனக்கு - மனத்துக்கு. வைப்பு - சேமித்து வைத்த பொருள். பிரான் - தலைவன். 'அடியார் அடி அடியோங்கட்கு அரியதுண்டே' என்ற அப்பர் வாக்கை இப் பாட்டின் இறுதி அடியோடு ஒப்பிடுக.

11. ஒளி - தீ. ஒளி சேர் அங்கையான் - சிவபெரு மான். திங்கள் கதிர் - பிறைச் சந்திரன். ஒன்றே என்பது இறைவனுக்கு ஆளாதல்.

12. பனிக்கு அணங்கு கண்ணியார் - கார் காலத்தில் மலரும் கொன்றை மலர் மாலையையுடையவர் - சிவபெருமான். கண்ணி-தலைமாலை. நுதல் - நெற்றி. தகவு - தனிப்பெருமை.

13. தார் - மாலை. அகலம் - மார்பு. நாகம் - பாம்பு. மலைமகள் - உமை அம்மையார்.

14. சேமம் - காவல். ஆகம் - உடம்பு. நஞ்சு-விஷம். நாகத்தான் - சிவபெருமான். இறைவனை இடையறாது நினைந்து தனக்குக் காவல் செய்து கொண்டமையின் 'தனி நெஞ்சம்' என்றார்.

15. வானவர் - தேவர். மின்செய் வான் செஞ்சடை - ஒளிபொருந்திய பெரிய சிவந்த சடை. சடை: சிவபெருமானுக்குரிய சிறப்படையாளம். (நீலகண்டமும் அப்படியே). வேதியனே என்றது கடவுளரில் சிறந்தவனே என்றவாறு.

16. 'என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்', 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்றபடி சிவானந்தத் தேனையுண்டவர் இருப்பர் ஆகலின் 'இனியோம், இடர் இல்லோம்' என்றார். கனைக்கடல் - கனைகடல் - ஒலிக்கும் கடல் இறைவன் தாளே பிறவிக் கடலை நீந்துதற்குப் புணை ஆயிற்று. 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார் இறைவன் அடி சேராதார்' - திருக்குறள். இடர் இல்லோம் - வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல - திருக்குறள். இடர் - இடும்பை - பிறவித் துன்பம்.

17. "காண்பார்க்கு என்ற மூன்றினையும் முறையே குரு, இலிங்க, சங்கமம் என்ற மூன்றிடத்தும் சிவனைக் காண்பார்க்கு" என்பர் சிவக்கவிமணி. உலகுக்கு ஆதி - 'உலகம்

தன்னிடத்து ஒடுங்கி மீள உளதாக நிற்றல்'. 'சங்காரகாரணனாகிய முதல்வனையே முதலாக உடைத்து இவ்வுலகம்' என்ற சிவஞான போதம் காண்க.

18. அரன் - உருத்திரன். நான்முகன் - பிரமன். அரியாம் பரன் - திருமால். 'தேவரின் ஒருவன் என்பர் திருவருச் சிவனைத் தேவர் மூவராய் நின்ற தோரார்' என்ற (சித்தியாரின்)படி மூவராய் நிற்பவர் சிவபிரானே என்பதைக் குறிப்பால் பெற வைத்தார். முரண் - மாறுபாடு. தானவன் - அரக்கன் - இராவணன். பாதம் - திருவடி. பின் இரண்டடிகளில் சிவபெருமானின் வல்லமை குறிக்கப் பெற்றது.

19. இறைவனைக் காணுநெறி யறியாது மாலும் அயனும் தேடிச் சென்றமையின் அவர்கட்கு இறைவன் அரியன் ஆயினன். அவ்விறைவனே அடியார்க்கு எளியனும் ஆயினன். மூவாமதி - பிறைச்சந்திரன். 'தன் அடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்' என்பது பிறை சூடியமையால் போந்த குறிப்பு.

20. அறிவான் - காண்பவன். அறிவிப்பான் - காட்டுபவன். 'காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே' - அப்பர் தேவாரம். சுடர் - தீ. பார் - நிலம். 'முன் அறிதல் அறிவித்தற் பொருட்டு எனவும், பின் அறிவாய் அறிதல் விடயத்தில் அழுந்துவித்தற் பொருட்டெனவும் கொள்க' - சிவஞான போதம்: சிற்றுரை.

21. அவனே - அந்த இறைவனே. இருசுடர்-ஞாயிறு திங்கள். புவி - நிலம். இயமானன் - உயிர். அட்டமூர்த்தி - எட்டுத் திருமேனிகளையுடையவன்.

22. 'இதனை' என்றது பிறையை. வாள் - ஒளி. அரவு - பாம்பு. நீர் - மேகம். இரா - இரவைப் போல. சென்னி - தலை. பிரானீர் - தலைவரே.

23. புனல் - நீர் - கங்கை. அனல் - தீ. கறைமிடற்ற- நஞ்சின் கறையுள்ள கண்டத்தையுடைய. எந்தை - எம் தந்தை - சிவபெருமான். 'தயா' என்பது தையா என நின்றது. தயா - அன்பு.

24. சேமம் - (சேர்த்த) பொருள். இங்கு என்றது உள்ளத்தில்.

25. இங்கு - (இறைவனைக் காணாத நிலையில்) இவ்விடத்து. பலிதிரிதல் - பிச்சை ஏற்றல்: ஆன்மாக்களின் வினைகளை ஏற்றுக்கொள்ளுதல். இரவு - சர்வசம்ஹார காலம். ஈமவனம் - இடுகாடு - யாவும் சங்கரிக்கப் பெற்ற இடம். ஆடுதல் - புனர் உற்பவம் ஆமாறு ஆடுதல். 'பெருங்கடல் மூடி' என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்துள் 'வருங்கடல் மீளநின்று எம்மிறை வீணை வாசிக்குமே' என்றது காண்க. 'இறைவனைக் காட்டு' என்றும், 'பலிதிரிதல் என்' என்றும், இது போன்ற பிறவும், வினவுகிற இயற்கை வாதிகளுக்குப் பதில் கொடுத்தவாறு. 'அறிவிப்பான் தானே' ஆகலின் அவன் அறிவிக்க அவனை அறிந்த நாளில் ஆராய்வோம் என்றபடி. கட்டு நிலையில் ஆராய்தல் வேண்டா என்று திருஞான சம்பந்த சுவாமிகளும் 'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா' என்று அருளியுள்ளமையும் நோக்குக.

26. ஞான்ற - தொங்கிய. குழற்சடை - கூந்தல் தொகுதி. வரை - கோடு. கறைமிடற்றான் - நஞ்சின்கறை பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான். கறைமிடறு-

சிவபெருமானின் சிறப்படையாளம். மிளிரும் - விளங்கும். அரவு மிளிரும் என்க. உமையம்மையாரது குழற் சடைகள் சிவபெருமானது மார்பில் பொன்மேல் கீறிய கோடுகள் போல் அழகு செய்தன. அயலே - பக்கத்தில். அக்கு - என்புமாலை.

27. ஆகம் - மார்பு. நயந்து - விரும்பி. பூணேல் - பூண வேண்டா. இரந்தோம் - வேண்டிக் கொண்டோம். ஒன்னுதார் - பகைவர். மூவெயில் - மூன்று மதில்கள் - திரிபுரம். பூண் - பூண்பாயாக.

28. பூண் - அணிகலம். அதள் - (புலித்) தோல். நாண் - கச்சு. பொறியிலிபேற்கு - அறிவில்லா[illegible]க்கு.

29. "பொருள் உணர்தலாவது: [illegible]பால் அழிவில்லாதவர் என்றும், பேய்க் கோலந்த[illegible]னந்தம் தருபவர் என்றும் உண்மைப் பொருளை அறிதல்" (சிவக்கவிமணி உரை.) பிறர் - இத்தத்துவப் பொருள் அறியமாட்டாதார். இகழ்வதே - அவர்களின் அறியாமை நோக்கி இரங்கியவாறு. பொடி - திருநீறு.

30. பிறருடைய என்பு - பிரமன், மால் ஆகியவர்களின் எலும்புகள். 'பெருங்கடல் மூடி' என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரம் காண்க. இரவு - சர்வ சம்ஹார காலம்.

31. மகிழ்தி - மகிழ்வாய். சேமம் - காவலிடம். யார் என்பேயேனும் - பிரமன் மால் முதலியவர்களுடைய எலும்புகள். 'ஈசனுக்கு அன்பில்லார் .... தமக்கும் அன்பு இல்லார்' (சிவஞான சித்தியார்) ஆகலின் 'அன்பே இன்னும் பெருக்கு' என்றார். மாணிக்கவாசகரும் 'அன்பு இலாதாரைக் கண்டால் அம்ம நாமஞ்சுமாறே' என்றதும் இதனை வலியுறுத்தும்.

32. முதற்கண்ணான் - எல்லார்க்கும் முன்னவன் - 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே' - அப்பர் தேவாரம்.

33. நுழைவு இலாதார் - நுட்பமாக மெய்ப் பொருளை ஆராயும் அறிவு இல்லாதவர். நீர்மை - தன்மை (பெருமை). மேல் உலந்தது - தனக்கு மேல் ஒன்றும் இல்லாமே செய்து எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தியது. பின் இரண்டடிகளோடு 'ஆர் ஒருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்' என்ற அப்பர் தேவாரத்தை ஒப்பிடுக.

34. அந்தரம் - வானம். ஆள் - இறைவனுக்கு அடிமை. ஏத்தார் - பகைவர் : திரிபுரத்தவர். வேமாறு - வெந்து போகுமாறு. கணை - அம்பு. செற்றான் - அழித்தவன் (சிவன). அடும் - அழிக்கும்.

35. அணிமிடற்ற அரவு - அழகிய கழுத்தையுடைய பாம்பு. பேழ் - பிளந்த. அசைத்தான் - கட்டியவன் (சிவன்). கோலம் - அழகு. மறு - கறை.

36. வார்-நீண்ட. நாகம் தெறும் என்று மதி தேய்ந்து உழலும். தெறும் - கொன்று விடும். உழலும் - வருந்தும்.

37. அடல் - வலிமை. அவுணர் - அரக்கர் - திரிபுரத்தவர். மதிஆர் - சந்திரன் பொருந்திய. மதிக்காதவர் பட்ட பாடு முதல் இரண்டடிகளில் கூறினர். மதிப்பார் பெறும் பயன் பிறவித்துன்பம் நீங்குதலாம். ஆக்கை - உடல்.

38. [illegible]லாதே - போலும். தார் ஏறும் - மாலைபோல் இருக்கும். கூர் ஏறு - கூர்மை பொருந்திய. கார் - கருமை. ஏனம் - பன்றி. ஏனக்கொம்பு - திருமாலின் வராகாவதாரத்தின் கொம்பு.

39. கொம்பு - பூங்கொம்பு போன்ற உமையம்மையார். குழகன் - அழகன். பொடி - விபூதி. அணி - மணி - அழகு. வரை - மலை.

40. தொண்டர்பாதம் தொழு - 'ஈசன் நேசரொடும் செறிந்திட்டு அங்கவர்தம் திருவேடம் .... அரன் எனவே தொழு' - சிவஞான சித்தியார். தொண்டரைத் தொழுவது ஏன் என்றற்கு விடை 'அறிவு அரியான் தனை யறிய' என்ற சிவஞான சித்தியாரில் காண்க. உள்ளாதார் - நினையாதார். ஒருவு - நீங்கு. உள்ளாதார் கூட்டம் ஒருவுதல் ஏன் எனில் 'அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலின்' என்பது சிவஞான போதம். மாணிக்கவாசக சுவாமிகளும் 'ஆள் அலாதவரைக் கண்டால் அம்ம நான் அஞ்சுமாறே' என்றும் "நள்ளேன் நினது அடியாரொடு அல்லால்' என்றும் அருளியது காண்க. வாயாலும் சொல்லுதலாவது : 'திங்கள் முடியார் அடியார் அடியோம்' என்றும், திருவேடங் கண்டால் 'அடியேன் செய்வது யாது? பணியீர்' என்றும் கூறி வழிபடுதல்.

41. பால் - பக்கம். இருவர் நிறமும் ஒன்றே ஆதலின் சிவபெருமான் நிறம் யாதோ என்ற வினு எழுந்தது. மின் - உமை.

42. இறைவன் முடியில் இருக்கும் பிறை வளராது இருப்பதற்குக் காரணம் கூறியவாறு. குழவித்தாய் - குழந்தையாய்.

43. பலி - பிச்சை. திரியேல் - திரியாதே. வானோர் - தேவர். விலக்காரேல் - விலக்காது போனல். யாம் விலக்க வல்லமே - எம்மால் விலக்கமுடியுமா? (முடியாது). 'திங்கள் இது சூடி - உலகத்தை விளக்கி அமுது அளிக்கும் திங்களைச் சூடியவர் பலிதிரிதல் வேண்டா என்பது குறிப்பு' (சிவக்கவிமணி உரை). தானே அறிவான் - இயல்பாகவே பேரறிவு உடையவர்.

44. அருளாவாறு என் - அருளாதது ஏன்? மனக்கு-மனத்துக்கு. மணவாளன் - கணவன்.

45. பெருநெறி - சிறந்த நெறி - சிவநெறி. பேணி - விரும்பி. எங்கு உற்றான் - எங்கு இருக்கிறான்? என்பீர்கள் - என்று கேட்பவர்களே - இறைவனைக் காண வேண்டும் என்ற விருப்பத்தால் கேட்கும் சிவனடியார்கள். என்போல்வார் சிந்தையினும் இங்குற்றான் - 'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத்தன் அடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்' - அப்பர் தேவாரம்.

46. அளியீர் - இரங்கத்தக்கவர் ஆவீர். 'இறைவனை இடையறாது நினைந்து வாழும் திறம் எளிது; இதை அறியாது இருக்கின்றீர்களே' என்று இரங்கியவாறு.

47. 'திறம் - அருட்டிறம்; ஏகனாகி இறைபணி நிற்றலும், சிவனருள் கண்டு காட்டக் காண்டலுமாகிய தன்மைகள்' (சிவக்கவிமணி உரை). இறைவன் திருவடிகளை அடைய வழிகள் நான்கு: அவை சரியை கிரியை யோகம் ஞானம் எனப்பெறும்; அவற்றையே 'திறம்' என்ற சொல்லால் குறித்தார் எனினும் ஆம். பெறத்தானும் ஆகியோ - வேறு முறைகளில் பெற முடியுமோ? (முடியாது). நிறத்த - நிறம் பொருந்திய. இருவடிக்கண் ஏழை - உமை. இரு - பெரிய. வடி - கூர்மையான.

48. ஏனம் - பன்றி. (இது) மதி - சந்திரன். மதி ஒன்று இல்லா - அறிவு இல்லாத. அரா - பாம்பு.

49. அராவி - தேய்த்து. குழவித்திங்கள் - பிறைச் சந்திரன். விராவுதலால் - பொருந்துதலால். வெள்ளிப் புரி - வெள்ளிக்கம்பி. புரிந்தால் போலாவே - முறுக்கி வைத்

தாற் போலும். தன்னோடே ஒப்பான் - 'தனக்கு உவமை இல்லாதான்' திருக்குறள்.

50. கனி - பழம். புடை மேவி - பக்கத்தே பொருந்தி. வலப்பால் - வலது பக்கம். கோலமதிவைத்தான் - அழகிய பிறையைச் சூடிய சிவன். குலப்பாவை - உமை. குழல் - கூந்தல்.

51. சிறுபுறம் - பிடரி. கோல் வளை - திரண்ட வளை யல் - இங்கு உமையைக் குறிக்கும். எழில் - அழகு. கழல் ஆர்ப்ப - வீரக்கழல் ஒலிக்க. அழல் - தீ. ஆடுதல் - புனர் உற்பவம் ஆமாறு ஆடுதல்.

52. செக்கர் - சிவந்த. அகல் - அகன்ற. சிரமாலை - தலைகளால் ஆகிய மாலை. சீர் - அழகு.

53. சீர் ஆர்ந்த - சிறப்பு வாய்ந்த. மலர் தழைப்ப - பூத்தலாலும். பேரியாறு - கங்கை. நீத்தம் ஆய் - வெள்ளம் வருதலாலும். செவ்வே - செம்மையாக. கார் - கார் காலம் (போலும்).

54. கார் உருவத்து - கருமை நிறம் பொருந்திய. கண்ணுதலே - சிவபெருமானே. உழிதருவான் - திரிபவன் (திருமால்). மேகத்தால் செய்தனைய மேனியான் - திருமால்.

55. பண்டு - முன். அமரர் - தேவர். பணி உறுவார் - பாம்புகளை அணிந்த சிவபெருமான். பால்மதி - வெண்மை யான சந்திரன். மணி மறு - அழகிய வடு. 'தனக்கே யன் றித் தன் உடைமைக்கும் மறு உண்டென்று நயம் தோன்றக் கூறியவாறு (காரைக் கவியரசு உரை).

56. வடு அன்று - குற்றம் அன்று. மதித்தி ஆயின் - கருதினல். வெண்பொடி நிறத்தாய் - திருநீறு அணிந்த

மார்பினையுடையவரே. வெண் புலால் தலை - பிரமனது மண்டையோடு. ஊண் - உண்ணுதல். புறம் பேசுதல் - பிறர் பழித்துப் பேசுதல். நிலா - சந்திரன்.

57. இரப்பினும் - பலி ஏற்றாலும். மடவரலார் - பெண்கள். விடம் - விஷம். அரவம் - பாம்பு.

58. செக்கர் போல் ஆகத்தான் - செவ்வானம் போன்ற திருமேனியை உடையவன்: சிவபெருமான். பாகத்தாள் - உமை.

59. ஆன்ஏற்றாய் - இடபத்தை வாகனமாக உடையவனே. பணித்துக்காண் - கூறியருள்.

60. விலங்கல் - மலை. மால்ஆய - மயக்கம் பொருந்திய. கைம்மா - களிறு - யானை. கார் உரிவை - கரிய தோல்.

61. "அன்று - அருள்விளக்கம்பெறாது உலகில் நின்று ஆட்செய்த நிலை. இன்று - அருள்பெற்றுச் சிவபூத நற்கணத்தில்ஒன்றாகப் பெற்று அதனால் உலகைவிட்டுத் திருக்கயிலையை அடையச் செல்லும் நிலை. என்பார் - உடன் அணைந்த அன்பர் கூட்டம்" (சிவக்கவிமணி உரை).

62. பூதப்பால் - உலகில். விசயன் - அருச்சுனன். ஏற்ற நாள் - போர் செய்த நாள்.

63. செங்கதிர் - சூரியன். நிலா எறிக்கும் கொல்லோ - ஒளி வீசுமோ? கடி உலவு - விளக்கம் பொருந்திய. திங்கள் - சந்திரன்.

64. இலற்கும் - விளங்கும். நேடி - தேடி. உழிதருமா கொல்லோ - உலாவித்திரியுமோ? காலையேபோன்று - காற்றைப்போல.

65. வேலை - வேளை. மிடறு - கண்டம். "நாளின் பல கூறுகளாகவே இறைவனது திருமேனிப் பகுதிகளைக் கண்டு போற்றியது."

66. மைத்தாம் - கருமையான. வண்ணம் - நிறம். கரிதாலோ - கரியதோ? பைத்து ஆடும் - படம் விரித்து ஆடுகிற.

67. மேய - பொருந்திய. சிலம்பு-வீரக்கழல். சிலம்பு ஆம் எனக் கூட்டுக. ஆம் - உரியது ஆகும். பகைமையுடைய பாம்பையும் மதியையும், மானையும் புலியையும் பகைமை தீர்ந்து ஒருங்கு இருக்க வைத்தமையானும், உலகை அழிக்கும் வெள்ளத்துடன் வந்த கங்கையின் வேகத்தைத் தணித்து உலகைக் காத்தமையானும், இறைவன் பேராற்றலும் பேரருளும் உடையவன் என்பது பெறப்படுதலின் அவ்விறைவனுக்கே வீரக்கழல் உரியதாம்.

68. சிலம்பு அடியாள் - சிலம்பை அணிந்த உமையம்மையார். செவ்வரத்தம் - செம்பஞ்சு. செம்பஞ்சு ஊட்டிய அடிமேல் முடிவைத்து வணங்கிச் சடையைக் கோலம் செய்தான் என்க. முதிரா மதி - இளம்பிறை.

69. கொடுமதி - வளைந்த பிறை. முக்கணன் - சிவபெருமான். கூற்று - இயமன். படி - பூமி. குனிய - வணங்க. அவலம் - பிறவித்துன்பம். 'இனி நமக்கு இங்கு அடையா அவலம்; அருவினை சாரா; நமனை அஞ்சோம் .... அடிபோங்கட்கு அரியதுண்டே' என்ற அப்பர் தேவாரத்தோடு ஒப்பிடுக. சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய், துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட தொண்டர் தம்மை இன்பக் கரை முகந்து ஏற்றும் திறததாய் இருத்தலின் 'நல்லஅடி' என்றார்.

70. தவிராது-நீங்காது. எரி-தீ. 'இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க' என்று வரம் வேண்டுவர் ஆகலின் இத் திருப் பாடலில் 'எரிபாய்ந்து ஆடும் இடம் காட்டுதியோ' என்றார்.

71. மடப்பாவை - கங்கை; உமை எனினும் ஆம். மலைப்பாவை - உமை. கண் - ஆராய்ந்து பார்.

72. எந்தை - என் தந்தையே! இறைஞ்சி - துதித்து. கைப்பணி - தொண்டு. அண்டம் - மேலுலகம். 'கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு' என்ற மணிவாசகத்தை அறிக. துண்டம் சேர் திங்கள் - பிறை. கண்ணாளா - அருள் செய்பவனே!

73. கருதிற்று - கருதியவை. சிக்கென - உறுதியாக. திருத்தலாம் - திருந்தப் பெறலாம். பரு - பெரிய. தரங்கம் - அலை. வெள்ளநீர் ஏற்றான் - கங்கையை ஏற்ற சிவ பெருமான். அடிக்கமலம் - திருவடித்தாமரை.

74. ஓதம்-குளிர்ச்சி. பேதையர்கள்-தாருகாவனத்து இருடியரது மனைவிமார். கண் ஆர் - இடமகன்ற. கபாலக் கலம் - தலையோடு.

75. விசும்பு - வானம். நலங்கொள் பரிசு உடையான் - நன்மை மிகுந்த இயல்புடைய இறைவன்.

76. விசும்பில் விதி உடைய - விண்ணுலகத்தில் இருத்தற்குரிய நல்வினைகளைச் செய்த. பணிந்து - வணங்க. மகுடம் - கிரீடம். அடி பொல்லாவாம் - திருவடிகள் சிவந்தன.

77. அடிகள் - சிவபெருமான். மாமுகடு - அண்டத்து உச்சி. கடகம் - கங்கணம். வான் - பெரிய. அரங்கு - ஆடும் இடம்.

78. ஏழாய் - ஏழை நெஞ்சே! வாளா இரங்குமோ - நாம் மனமொழி மெய்களால் தொண்டு செய்யாது இருப்பின் இறைவன் இரங்குவரோ? (இரங்கார்); ஆனால் பன்னாள் இரப்பின் இரங்குவர் என்றபடி. 'அவன்தனை யான் பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால் இவன் எனைப் பன்னாள் அழைப்பு ஒழியான் என்று எதிர்ப்படுமே' என்ற அப்பர் தேவாரம் காண்க.

79. படர்சடையான் - விரிந்த சடையுடைய சிவன். போது - மலர். அணிந்தவர் - அடியார்கள். அடியார்களை வழிபடுதல்: 'திருவேடமானது வசீகரத்துச் சிவ போக விளைவிற்கு ஏதுவாய்ச் சிவமே கண்டிருக்கும் காட்சியிற் செலுத்தும்' - சிவப்பிரகாசம் உரை. சிந்தையார்க்கு உள்ள செருக்கு: "இறுமாந்திருப்பன் கொலோ" என்ற அப்பர் தேவாரம் காண்க.

80. எத்தனையோ - இருபது என்றபடி. அரக்கன் - இராவணன். அடர்த்த - (வலிமையை) ஒழித்தன. காலன் - இயமன்.

81. கை கழன்றோம் - விட்டோம். மேலை இருவினை - பிறவிக்குக் காரணமாகிய வினை. அரணார் - முப்புரத்தலைவ அரணார் ........ எய்தான் - சிவன். சரணாரவிந்தம் - திருவடித் தாமரை.

82. சார்ந்தார் - அடியவர். பெற்றியவாம் - தன்மை உடையன. தேர்ந்து உணரில் - ஆராய்ந்து தெளிந்தால். தாழ்சுடரோன் - மாலைச் சூரியன். சாயும் - தோற்கச் செய்யும். தழல் வண்ணன் - செம்மேனி அம்மான் - சிவன். மின் உரைக்கும் என்க. மின் - மின் போன்ற பெண். இப் பாடல் இறைவனைக் காதலித்த ஒரு பெண் கூற்றாகக் கொள்க.

மின் - மின்னல் எனினும் ஆம். 'மின் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ் சடை'. சடையாகிய மின்....பெற்றியதாம் என்று கூட்டுக.

83. இசைந்தால் - இசைந்த (கோலம்). என்றிரேல் - எதுபோன்றிருக்கும் என்று கேட்டால்.

84. தண்மதி - குளிர்ந்த திங்கள். கடுஞ்சுடர் - வெப்பம் மிகுந்த ஞாயிறு. விண்டார்கள் - பகைவர்கள் - முப்புரத்தவர். இறைவன் நெற்றிக்கண் தீப்போல் எரித்த போதிலும் ஞாயிறு திங்களின் தன்மைகளும் கொண்டுளது என்றவாறு. "மூவெயில் செற்ற ஞான்று" என்ற சுந்தரர் செந்தமிழான் மூவர் உய்ந்தமை பெறப்படும். எனவே இறைவன்கண் அழித்தல் ஒன்றே செய்திலது.

85. பெரியான் - தனக்குமேல் பெரியர் இல்லாதவன் - சிவன்; '....... குலவரையைக் கலந்து நின்ற பெரியானை' என்பர் திருநாவுக்கரசரும். காணப் பெறின் - 'கயிலையில் இறைவரைக் காணச் செல்கின்றார் ஆகலின் இவ்வாறு கூறினார்' (சிவக்கவிமணி உரை).

86. பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம் - "பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றும் நற்கணத்தினில் ஒன்றானேன் நான் என்று நயந்து பாடி" என்று சேக்கிழார் சுவாமிகள் எடுத்தாண்டமையும் கருதுக.

87. நாமாலை சூடி - தோத்திரப் பாடல்களைப்பாடி. 'ஞானசம்பந்தரும் நாவினுக்கரையரும் சொல்லியவே சொல்லி ஏதது உகப்பான்' இறைவன் ஆகலின் தேவாரத் திருமுறைகளை ஓதுதல் வேண்டும். 'பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி' என்றார் திருநாவுக்கரசரும். ஏற்ற ஏது ஆடும் - எவ்வாறு வருந்தும்?

88. மருள் இல் - குற்றம் அற்ற. ஒளி - கறையின் ஒளி.

89. விலி - வில்லி - வில்லையுடைய. பொடியா - சாம்பல் ஆகுமாறு. தெளிவு உள்ள சிந்தை: உற்றவரும் உறு துணையும் நீயே என்றும், உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்ளேன் என்றும் தெளிந்த சிவனடியார் திருவுள்ளம்.

90. என் செய்தி - என்ன செய்வாய்? திரை - அலை. இறைவன் கங்கையை அடக்கிவைத்த பேராற்றலைப் புகழ்ந்தவாறு.

91. திரை - இங்குக் கங்கையைக் குறிக்கும். உரை மருவி - புகழ்ந்து பாடி. புறங்கூறுதல்: 'பூதலரால் உன் அடியான் என்று ஏசப்பட்டேன்' என்று மாணிக்கவாசக சுவாமிகளும் புறங்கூற்றைக் குறித்தல் காண்க.

92. ஏகமாய் நின்றான் - தானே தனி முதலாய் நின்றான். ஏகன் - சிவன். அறியாத தன்மையன் - இப்படியன் இந்நிறத்தன் என்றெழுதிக் காட்டொணாத தன்மையன். தூ - தூய்மையான. வைத்தனைய - வைத்தாற் போன்ற.

93. மைத்து அமர்ந்த - கருமை நிறம் பொருந்திய. 'அன்பே சிவமாவது' 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை' ஆகலின் 'அன்பாய் விரும்பு' என்றார். சேக்கிழார் சுவாமிகளும் திருக்கூட்டத்தினரைச் சிறப்பித்துக் கூறுங்கால் "ஈர அன்பினர்' என்றருளினர்.

94. பிரிய கில்லாயோ - பிரிய முடியாது இருக்கின்றாயோ? பொருப்பன் மகள் - உமை. பொருப்பன் - இமவான். மஞ்சு - மேகம். மால்விடை - திருமால் ஆகிய இடபம். சொல்லாய் - சொல்லுவாயாக.

95. அவள் - உமையம்மையார். சலமகள் - கங்கை. ஏகீத - சடையினின்று நீங்காள் என்றபடி. தவளம் - வெண்மை. அன்பு அணியார் - நெருங்கிய அன்புடையவர் என்றவாறு. சொல்லுமின் - சொல்லும். ஆர் - யார்?

96. தாயம் - உரிமை.

97. உறைப்பு - வலிமை. உளைந்து - சீறி. அழல் - தீ.

98. கான் - காடு. அனல் - தீ. செப்பு - சொல்லுவாயாக.

99. செப்பு ஏந்து இளமுலையாள் - உமாதேவியார். செப்பு - செம்பு. ஆகம் - உடல். ஐவாய நாகம் - ஐந்து தலைகளையுடைய பாம்பு.

100. படி - உலகம். வேம் - வெந்து போகும். அடுக்கல் பொரும் ஏறு - சிங்கம். அடுக்கல் - மலை. ஆன் ஏறு - இடபம். நின் ஏறு - நின் வாகனம். உரும் ஏறு - இடி. உரை - கூறுவாயாக.

101. காரைக்கால் பேய் - 'உன்பால் ஆங்கு நின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப் பாங்குற வேண்டும்' என்று பரவி, இறைவன் அருளினாலே 'வானமும் நிலனும் எல்லாம் வணங்கும் பேய் வடிவு' பெற்ற காரைக்கால் அம்மையார். கரைவினால் - கசிந்து. சொல் பரவுவார் - சொல்லியவே சொல்லி ஏத்துவார். அண்ணல் - சிவபெருமான். போராத - நீங்காத.

உ

செந்திலாண்டவன் துணை

# திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

## அவர்களால் ஏற்படுத்தப்பெற்றுள்ள தருமங்களின் விவரம்

| எ. | விவரம் | நிதி ரூபாய் |
|---|---|---|
| 1 | சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் .... | 15,000 |
| 2 | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த .... | 11,500 |
| 3 | திருவாங்கூர் மகாராசா தேவாரப் பரிசு .... | 5,000 |
| 4 | சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு .... | 5,000 |
| 5 | மூவர் தேவாரப் பரிசு சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் .... | 10,000 |
| 6 | ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதகாசிரியர் நியமிக்க .... | 60,000 |
| 7 | அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க .... | 30,000 |
| 8 | திருப்பனந்தாளில் தமிழ்க்கல்லூரி நிறுவ .... | 1,50,000 |
| 9 | இசைத்தமிழ்க் கல்விக்கு .... | 1,00,000 |
| 10 | திருப்பனந்தாளில் கால்நடை வைத்திய சாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் .... | 20,000 |
| 11 | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு அன்னதானம் .... | 10,000 |
| 12 | இராமேச்சுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் .... | 10,000 |

13 திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம் 3,000
14 ஸ்ரீகாசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் .... 17,000
15 திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி .... 1,00,000
16 திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை ஏ. 44 செ. 22 நிலவருமபடி
17 திருப்பனந்தாள் மண்ணியாற்றில் கேதாரக் கட்டம் .... 2,900
18 திருப்பனந்தாள் மண்ணியாற்றில் அரிச்சந்திரக் கட்டம் .... 3,000
19 கும்பகோணம் மணிக்கூண்டு .... 25,000
20 தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை .... 21,000
21 ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் .... 9,000
22 மைசூர் மகாராசா தேவாரப் பரிசு .... 5,000
23 மாயூரத்தில் தேவாரப் பரிசு .... 5,000
24 சென்னை விவேகானந்தா கல்லூரியில் சைவ சித்தாந்தக் கட்டளை .... 10,000
25 ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தக் கட்டளை .... 20,000
26 ஸ்ரீ வைகுண்டம் தேவாரப் பரிசு .... 5,000
27 மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு.... 10,000
28 ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு .... 1,00,000
29 ஸ்ரீகாசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் .... 5,000

| | | |
|---|---|---|
| 47 | ஸ்ரீகாசி கேதாரீஸ்வரர் கோவிலில் ஏழைகள் அன்னதானம் .... | 5,000 |
| 48 | ஸ்ரீவில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு .... | 3,500 |
| 49 | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம்போட .... | 7,500 |
| 50 | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு .... | 5,000 |
| 51 | திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் .... | 7,000 |
| 52 | 28வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ வைகுண்டம் முதல் ஆண்டு உதவி நிதி .... | 5,000 |
| 53 | 30வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் உணவு நிதியின் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழக முதல் இரண்டு ஆண்டு மூலதனம் .... | 14,000 |
| 54 | 28வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் நிதியின் திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம் .... | 5,000 |
| 55 | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டடமும் நிலமும் .... | 15,000 |
| 56 | மாளவியாஜீ பெயரால், கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக்கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை .... | 5,000 |
| 57 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் .... | 60,000 |
| 58 | பனசை மண்ணியாற்று சோமேசர் துறை கட்ட .... | 1,500 |

| | | |
|---|---|---|
| 30 | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு .... | 1,50,000 |
| 31 | டாக்டர் சுவாமிநாதய்யர் நினைவுத் திருக்குறள் பரிசு சென்னை .... | 3,500 |
| 32 | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு .... | 1,000 |
| 33 | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி .... | 3,000 |
| 34 | ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்ய மகேசுவர பூசை .... | 10,000 |
| 35 | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் .... | 4,000 |
| 36 | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி .... | 1,000 |
| 37 | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு .... | 3,500 |
| 38 | திருநெல்வேலியில் அபிராமி அந்தாதிப் பரிசு .... | 3,500 |
| 39 | திருப்பனந்தாளில் தண்ணீர்ப் பந்தல் தருமம் .... | 3,500 |
| 40 | ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பக நிதி .... | 3,500 |
| 41 | சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி .... | 35,000 |
| 42 | சிதம்பரத்தில் திருவாதிரை, ஆனி உத்திரம் நாட்களில் அன்னதானம் .... | 12,000 |
| 43 | இராமேச்சுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் .... | 3,500 |
| 44 | ஸ்ரீவைகுண்டத்தில் நூல் நிலையக் கட்டிடம் | 10,825 |
| 45 | பஞ்சாப் அகதிகள் நிவாரண நிதி .... | 5,000 |
| 46 | அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி .... | 3,500 |

| | | |
|---|---|---|
| 59 | ஸ்ரீவைகுண்டம் பெண்கள் உயர்நிலைக் கல்விக் கூடம் நிறுவ .... | 45,000 |
| 60 | ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி .... | 5,000 |
| 61 | பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு .... | 5,000 |
| 62 | 6வது ஸ்ரீ காசி பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக கொடுத்தது .... | 16,000 |
| 63 | 30வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்ன தானம் - (மதுரை முதலாண்டு உதவி மூலதனம்) .... | 7,000 |

ஸ்ரீ வித்யா பவர் பிரஸ், கும்பகோணம்.